



# நாகமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

எமது குல விளக்கு

# அமரர்
# திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்

அவர்களின்

**சிவபதப்பேறு குறித்த**

# நாகமணி

**04. 10. 2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் வளமான வாழ்விற்கும்

வளர்ச்சிக்கும், பண்பட்ட பாசத்திற்கும்

மூலவேராக முன்நின்று நல்வழிகாட்டி

விடி வெள்ளியாய்த் திகழ்ந்த தெய்வமே!

ஆருயிரான எம் அரும் உறவே!

கலைஞான அறிவுதந்து செம்மையுற வாழ

வழி காட்டிநின்றீர்,

நின் பாதார விந்தங்களில்

இந் "நினைவு மலர்" தனை

சமர்ப்பித்து வணங்குகிறோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக"



இத்தியடியில்
22.03.1938

இறைவனடியில்
04.09.2016

அமரர்

# திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்

(நாமகள் முன்பள்ளி இயக்குநரும், ஓய்வுபெற்ற ஆசிரியரும்)

அவர்கள்

## திதி வெண்பா

திகழுறு துர்முகி வருட பிள்ளையார் பிறந்த தினத்தில்
புகழுறு சதுர்த்தி வளர்பிறையில் புகழ் பெற்ற ஆசிரியை
நாமகள் பாலர் கல்வி அறிவித்த நாகேஸ்வரி இறையுலகு சென்றாளே
எமது துயர் ஆறாத இருகரம் கூப்பி வணங்குவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்(று) ஓர் களைகண் இல்லேன்
கழல் அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போ(து) உணர மாட்டேன்
புண்ணியா! உன் அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறு மயில் ஏறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரைவ தைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம்அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தர்மலிங்கம் நாகேஸ்வரி அம்மையார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

பரம்பொருளின் திருவருளால் ஈழத்திரு நாட்டின் முடியெனத் திகழும் பாணன் பாடி விருது பெற்ற யாழ்நகரின் தென்மராட்சியின் சங்கத்தானைப் பகுதியிலே, இத்தியடி வீரகத்தி விநாயகப் பெருமானின் அருட்கடாட்சத்தால், வாழ்ந்துவந்த விஸ்வகுலத் தம்பதியரான கதிரவேலு அழகம்மா தம்பதியினருக்கு நாகேஸ்வரி அம்மையார் 1938 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார்.

இறைவன் அருளால் இவருக்கு நடராசா (தபாலதிபர்) கனகம்மா நாகராசா ஆகியோர் சகோதரர்களாய் கிடைக்கப் பெற்றனர். தனது இளமைக்கல்வியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்றார். பலதுறைகளில் ஈடுபாடு கொண்டாலும் வயலின் மீட்டுவதில் அதிக ஆர்வம் கொண்டார். சாந்தம் மிகு முகமும் கனிவுடைய பேச்சும் பொறுமையுடைய நடத்தைகளும் இவரின் இளமைப்பருவத்தை மேலும் அலங்கரித்தன. தன் இருபது வயதில் இல்லறம் காண, துணைதேடி வண்ணார்பண்ணையைச் சபாபதி வீதியைச் சேர்ந்த ஆசிரியர் சங்கீதபூஷணம் ஐயம்பிள்ளை தர்மலிங்கம் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்களை கரம்பிடித்தார். வண்ணார்பண்ணையில் அவரின் குடும்ப வாழ்க்கை இனிதே அமைந்தது. புகுந்த வீட்டினரின் மனதிலும் தன் இனிய குணங்களால் நிலை கொண்டார். தனது சொந்தக்காணியில், சிறுவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் பொருட்டு தனது கணவருடன் இணைந்து பாலர் கல்விக்கூடம் ஒன்றை அமைத்தார். (1970) காலையில் பாலர்களிற்கும் மாலையில் ஏனைய வகுப்புக்களிற்கும் தன் கணவருடன் முன்னின்று கல்வி கற்பித்தார். இக்கல்விச் சேவைக்காய் தினமும் வண்ணார்பண்ணையிலிருந்து தனது சொந்த ஊருக்கு வந்து செல்வார்.

1979 இல் தன் கணவருடன் இணைந்து அவரின் சொந்தக்காணியில் புதுமனை ஒன்றை அமைத்தார். இனிதே புரிந்துணர்வுகளுடன் அமைந்த இத்தம்பதியினரின் வாழ்க்கை காலனுக்குப் பிடிக்கவில்லை போலும் புதுமனை புகுந்து ஒரு வாரம் கூட பூர்த்தியாகாத நிலையில் இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரின் உயிர்பிரிந்தது. இறந்த துயரம் ஆறாத காலத்திற்குள் தர்மினியை மகளாய்ப் பெற்றுக் கொண்டார். தன் மகளுக்கு பாசத்தோடு நல்ல அறிவுரைகளையும் ஊட்டி அவர் வாழ்வில் தூணாய் நின்றார்.

அக்காள் கனகம்மா பக்கபலமாய் நிற்க, அவர்களின் பிள்ளைகளையும் தன் பிள்ளைபோல் எண்ணி நல்ல ஆலோசனைகளை வழங்கி நல்வழிப்படுத்தினார். தன் கணவர் வழிப்படுத்திய நெறியில் பாலர் பாடசாலையில் தனது கல்விச் சேவையைத் தொடர்ந்து செய்துவந்தார். வருடந்தோறும் பரிசளிப்பு விழாக்களை நடத்தி எம் ஊரின் கலை, கலாசார பாரம்பரிய அம்சங்களை வெளிக்கொணர்ந்தார். மாணவர்களின் விளையாட்டுத்திறன், ஆளுமைப்பண்பு வருடந்தோறும் விளையாட்டு விழா நடத்தி பிரதிபலித்தார். அவரின் சிந்தனைகளும் செயல்களும் நாமகள் பாலர் பாடசாலைக்கு உயிரோட்டம் கொடுக்கும் வகையிலே அமைந்திருந்தன. இத்தியடியானின் சிவராத்திரி, ஆவணிச்சதுர்த்தி, மணவாளக்கோலங்களிலும் தனது பிள்ளைகளின் கலைத்திறமையை மேடையேற்றினார். அத்துடன் மாலை நேரங்களில் கல்வியில் நாட்டம் குறைந்த மாணவர்களிற்கு விசேட வகுப்புக்களை நடத்தியும், பெற்றோர்களிற்கு பாலர் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் வந்தார். கல்விக்கூடத்தையும் தாண்டி மாணவர்களின் வலயரீதியான, மாகாணரீதியில் போட்டிகளிலும் நாமகள் மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டினார். தனது வீட்டில் இயங்கி வந்த பாலர் பள்ளியை தனியான இடத்தில் கட்டடம் கட்டி நடத்த வேண்டும் என்ற கருத்தை பழைய மாணவர்களிற்கு தெரிவித்தார். நாமகள் முன்பள்ளி புதியதொரு உருவம் கண்டது.

சமூகத்தில் பல கல்வியாளர்களின் உதவியுடன் இவரின் ஆளுமை, பக்தி, மனிதப்பண்பு நிறைந்த சுபாவத்திற்கு இவரின் சமய, சமூ கப்பணிகள் சான்றாகின்றன. இத்தியடி விநாயகரின் தின்சரி பக்தையான இவர். திருவிழாக்காலங்களில் தானாகவே முன் வந்து செய்யும் சீரப்பணிகளிற்கு குறைவில்லை. நல்லதையே எண்ணி, நல்லதையே பேசு, விநாயகர் கைவிடமாட்டார். பிள்ளையார் நல்வழி காட்டுவார் போன்ற வார்த்தைகளை இன்றும் எம் மனதில் நிற்கின்றன. ஊர் சிறுவர்களின் ஆன்மீக அறிவையும் இறைபக்தியையும் பெருக்கும் பொருட்டு அறநெறி வகுப்புக்களை நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மகளையும் தனது முன்பள்ளிப் பாதையில் இணைத்து முன்பள்ளிப் பொறுப்பையும் அளித்து அவர் கணவர் இட்ட விதை விருட்சமாவதைக் கண்டு ஆத்மதிருப்தி அடைந்தார். இத்தியடிப்பிள்ளையார் கோவிலிற்குள் கண்ணனுக்கான சிறிய கோவில் கட்டியமை அவரின் சமயப்பணிக்கு உதாரணமாகும். விநாயகர் உலாவரும் போது அவர்பின்னே தாளம்தட்டி பஜனை செய்த காட்சிகள் என்றும் எம் மனதில் நிலைக்கும். எம் சமூகத்திலுள்ள சிறுவர்கள் முதல் பெரியோர் வரை சின்னா ரீச்சர், பழம் ரீச்சர் என அழைப்பது ஓயவில்லை. சமயப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி என்பவற்றில் சிறந்து விளங்கியதால், எம் ஊரின் திரேசா அம்மையார் எனப் போற்றப்படும் அளவிற்கு அவர் புகழ் உயர்ந்துள்ளது.

பசுமை நிறைந்த அவரின் நினைவுகள் நீங்காத நினைவுகளாய் பசுமரத்தாணிபோல், என்றும் பரிணமித்துக் கொண்டே இருக்கும். அறுகம்புல்லையும் செவ்வரத்தையையும் விநாயகருக்கு அவர் தினம் கொடுத்து வழிபட்டாலும் துர்முகிவருட ஆவணிச்சதுர்த்தியில் **2016.09.04** உயிரையே விநாயகர் காணிக்கையாய் பறித்துவிட்டார். உடலளவாலும், மனதளவாலும் வாடாது புன்சிரிப்புடன் அவர் உயிர் பிரிந்தது.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புத் தாயும் என் ஆத்மார்த்தமான குருவும்

கருவறை சுமந்த சிசு ஈன சுதியாக
ஆசை அம்மாவும் அப்பாவும்
இந்திய ஆலயத்தில் தன் ஆசை இயம்பி நின்றார்.
அரவம் வந்து சொல்லிச் செல்ல
இத்தியடியானில் கண்ணகையும் வைத்தார்
அவன் அருளும் பெற்றார்
கைப்பிடித்த மணாளன், என் அப்பா
கல்லறையில் சாய

தலைவிதியை நொந்து மனம் தவித்துப் போக,
கனவில் அரவம் வந்து கதை சொல்லிச் செல்ல
பிள்ளையார் கோவிலுக்குள் கண்ணனையும் வைத்தார்
அவரருளும் பெற்றார் கடவுள் பக்தி கொண்ட
என் தாய்க்கு பார்வதியாள் வாக்கு,
பாலகியாய் என்னை இருகைக்குள் பக்குவமாய் பெற்று
"தர்மினி" பெயர் சூட்டி,
தன் நெஞ்சறைக்குள் காத்தார்

ஒரு துளிமழைக்காய் ஏங்கிய பயிர்போல்
இரு விழி மழையின் பின் என்றனைப் பெற்று
கண்ணின் மணியாய் விண்ணின்
நிலவாய் உயர்வாய் வளர்த்தார்
ஏடுதொடக்கியது மதுரைமீனாட்சியில்
எனக்காய் வாழ்ந்த என் அம்மா வேணும்
"உந்தன் முகமே என் மன வலிக்கு
ஏற்றமருந்தம்மா" உறங்கச் செய்து உறங்காது பார்த்து
கறங்காய் சுழன்ற மனதை ஆற்றினேன் என் பீர் அம்மா.

கட்டித் தழுவி முத்தமிட்டு சிட்டாய் பள்ளி செல்லும் பருவத்தில்
குருவாய் இருந்தீர் கடவுளின் துணையோடு
கரத்தில் எடுத்த தாய் சிரத்தில் இருந்து பாதம் வரை
இருத்தி ஏற்றம் தந்தவர் ஒன்பது வயதில் சமய தீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயாசாரம் சாற்றி வளர்த்தார்
அன்பின் வடிவாய் அறிவின் சுடராய்
தன் அன்பையும் உருக்கி எனக்காய் வாழ்ந்தவர்
கலைகள் பயிற்றிய கலா வித்தகி
என் வயலினின் நாதமாய் என் அம்மா ஆனார்

பாடலும் ஆடலும் பாங்காய் பயிற்ற
எங்கள் பதியினை கலை அரங்காக்கி பயிற்றி மகிழ்ந்தவர்
உங்கள விட்டு ஒரு நிமிடமும் விலக விரும்பாத அன்பு இதயமே
என்னை விட்டு நீங்கள் விலகிய தேனோ
என் அம்மா எனக்கு வேணும்
அம்மாவை கடவுள் என வணங்கும் உலகில்
கடவுளே எனக்கு அம்மாவாய்
கிடைத்த பேறு இது மானுடத்தின் குறையறியேன்
என் மனங் கொண்ட அம்மாவில்
யாரிடத்தும் அம்மாவை நான் கண்டு ஆறமாட்டேன்.

ஆண்டவன் எனக்குத் தந்த ஆத்மார்த்த உறவம்மா
விரும்பியா அம்மா
என்னை விட்டுச் சென்றீர்கள்.
என் புலம்பல் குரல் கேட்டா
கட்டியணைத்து விரையில் நான் உன்னிடம்
வந்திடுவேன் "தர்சி" என்றீர்.

அம்மா அம்மா தாயிழந்த பசுங்கன்றாய்
துடித்து விழுகின்றேன்
என் மனதைப் புரிய உம்மை விட்டால் யாரம்மா.
ஆவணிச் சதுர்த்தி
அடுக்குகள் பார் தர்சி மருத்துவ மனையினின்றும்
மருப்பொடித்த என் நினைவு பிள்ளை தர்சி
பிள்ளையார் சதுர்த்தியை வடிவாகச் செய் என்று
அந்நாளில் அவனடியில் அமைதி கொண்ட அம்மாவே.

முன்பள்ளி என் பள்ளி எனக்குப்பின்
என் பிள்ளை தர்சி! உன் பள்ளி
பொறுப்புத்தந்து விட்டு
சுறுக்காய் எங்கு சென்றீர் சுற்றமெல்லாம் புலம்பியழ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்சியம்மா தாய்த் தமிழின் அரும் வார்த்தை
எப் பிறப்பில் நான் கேட்பேன்
நினைவுப் பாட்டிற்கு நாலுவரி சொல்லவில்லை...
என் உதிரத்தின் அணுவெல்லாம்
ஓர் உறவு நீங்கள் அம்மா.
ரீ குடி, 10 தரம் சொல்ல வேணும்
செல்லமான கண்டிப்பு
நான் இல்லா விட்டால் ரீயும் இல்லை என்பீர்....
அம்மா அம்மா அதுதான் இன்று உண்மை.

நற்றாயாய் நற்குருவாய்
கண்காக்கும் இமைபோன்ற
காவலராய்
என் அருகிருந்து
என் வாழ்வின் துயரெல்லாம்
உங்கள் தலை ஏற்றி
உறங்க வைத்த அம்மாவே.

எனக்காய் நீர் சொரிந்த உயர் வானமே
எனக்காய் பூத்துக்குலுங்கிய விருட்சமே
எனக்காய் பாடித்திரிந்த பறவையே
எனக்காய் உருகிய மெழுகுவர்த்தியே
ஒரு முறை ஓரே ஒரு முறை
"தர்சியம்மா" அழகொழுக அழையுங்கள் அம்மா.

**பாசமகள்**
**த. தர்மினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாசமலர் தங்கைக்கு

அன்புத் தங்கையே நாம் சகோதரிகளுக்கு எடுத்துக்காட்டு
அடிக்கடி என்னை வந்து சுகம் விசாரிப்பாய்
அன்பாய் கதைக்க இனியார் உளர்
ஆலோசனை உறவும் எழுந்து வாராயோ - தங்கையே

எங்கு சென்றாலும் இருவரும் செல்வோம்
எது எடுத்தாலும் இருவரும் எடுப்போம்
எது வாங்கினாலும் இருவரும் வாங்குவோம்
எது கிடைத்தாலும் இருவருக்கும் கிடைக்குமே
ஏன் இறுதி விடை கொடுப்பதில் தனித்து விட்டாய்

தங்கையே! என் துன்பம் உன் துன்பம் என்று பாராமல்
இருவரும் வாழ்ந்த காலம் பல காலம்
உன் இழப்பு என்னை வதைக்கிறதே
என் பிள்ளைகள் உன்பிரிவை
ஏற்க மறுக்கின்றனர் - தங்கையே!

**உங்கள் அன்பு**
**அக்காள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் புலம்பல்

அன்பின் வடிவாய் எம்மை அரவணைத்தாயே
ஆழி சூழுலகில் எம்மைச் சான்றோர் ஆக்கினாய்
இப்புவிதனில் உன் பெயரை நிலை நிறுத்தி
ஈர்த்து விட்டாய் பெறாமக்கள் எம் இதயத்தை
உற்றார் உறவினருக்கு அக்கா பிள்ளைகள்
என் பிள்ளைகள் என்றாய்
ஊரில் உள்ள பிள்ளைகளுக்கும் நல்வழி காட்டினீர்களே
எமக்கு இனி நல்வழி காட்ட யார் உளர்?
ஏனிந்தச் சோதனை உங்கள் பிரிவு
ஐவரும் உன்னை அக்கா அக்கா என்று அழைத்தோமே
ஒருக்கால் எழுந்து வந்து எம்மை அணைக்கமாட்டீரோ?
ஓர வஞ்சகம் காட்டாது ஒற்றுமையாய் வாழ்ந்தோமே
ஔவைப்பாட்டி போல் அறிவுரைகள் சொல்வீர்களே
'பிள்ளையாரே சரணகதி என்று நம்பினால்
கைவிட மாட்டார் கணபதி' எனும் தத்துவத்தை
எமக்கு உணர்த்தி விட்டு ஆவணிச் சதுர்த்தி என்றாலே
பிள்ளையாரையும் உங்களையும் நினைக்கும்
பாக்கியத்தைக் கொடுத்து மறைந்துள்ளீர்களே அக்கா
உங்கள் பிரிவை என்றும் மறவோம்.

**பெறாமக்கள்**

# From Grand Children

There isn`t grandma sweeter than a grandma just like you one filled with love and laughter in everything you do.

When we were small you`d pick us up and pal us on your knee. You could always make it better and always comfort us. You did many things to make our studies better you brought us books and shared good advices. Grandma without you our lives would be a sorry place we`d miss the kindness in your face. For where roots grow deep. your memories grow forever.

You will be in our heart forever

with love,
Grand daughters and grandsons



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மாமி முறையாகி மனதினிலே தாயாகி
செயல்கள் பல செய்த நற்தாய்
பெற்றால் தான் பிள்ளையா?
எம் பிள்ளைகளை வளர்த்தெடுத்த அன்புத்தாய்
அம்மம்மா, அம்மம்மா ஆயிரம்பேர் இருந்தாலும்
அன்புறவு உம்போலே யார்கிடைப்பார் மேதினியில்
யாரிடத்தும் உம்நட்பு கிடைக்காது கிடைக்காது
மனமுடைந்து வாழ்கின்றோம்
திடீரெனவந்த செய்தி திக்கிக்க வைத்ததுவே
எத்திக்கு பார்த்தாலும் உம்முகமே தெரியுதம்மா
உம்பாத மலர்களுக்கு எம்வரிகள் சமர்ப்பணமே.

**மருமக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தர்மலிங்கம் நாகேஸ்வரி
### (நாமகள் முன்பள்ளி இயக்குநரும் ஓய்வு நிலை ஆசிரியருக்கும்)

அமரர் தர்மலிங்கம் நாகேஸ்வரி அவர்கள் தன்னுடைய இல்லற வாழ்க்கையை கணவர் ஐயாப்பிள்ளை தர்மலிங்கத்தோடு சிறப்பாக வாழ்ந்து வந்தார். அவரது மறைவிற்குப்பின் தனது ஒரே மகள் தர்மினியை உயர்கல்வி கற்க வைத்து நாமகள் முன்பள்ளியின் பொறுப்பை கடந்த இரண்டு வருடங்களாக தனது மேற்பார்வையில் அவரிடம் ஒப்படைத்தார்.

அமரர் நாகேஸ்வரி அவர்கள் நாமகள் முன்பள்ளியை 1970 களில் சிறிய அளவில் தனது வீட்டில் அவரது கணவரின் முயற்சியால் ஆரம்பித்து சிறப்பாக நடாத்தி வந்தார். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவார்" என்பதற்கு அமைய குழந்தைகளின் ஆரம்ப கல்வியில் பெரும் அக்கறை கொண்டு தென்மராட்சி வலயத்தில் புகழ்பூத்த முன்பள்ளிகளில் ஒன்றாக கடந்த 46 வருடங்களாக இம் முன்பள்ளியை நடாத்தி வந்தார். அவரது கணவர் இறந்ததன் பின் முன்பள்ளியின் முழுப்பொறுப்பையும் தானே எடுத்து சங்கத்தானைப் பிரதேச குழந்தைகளுக்கு பெரும் சேவை புரிந்துள்ளார். இவரிடம் கற்றவர்கள் பலர் பெரும் பதவிகளில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருவது அவரது சேவையைக் காட்டி நிற்கின்றது.

இம் முன்பள்ளிக்கு 2015 இல் பழைய மாணவர்களின் பங்களிப்புடன் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றது. இதற்கான முயற்சிகளை தானும் பழைய மாணவர்க்கும், ஊர் அறிவாளிகளும் எடுத்து இம் முன்பள்ளியை அமைத்து தனது மகள் தர்மினியிடம் தலைமைப் பொறுப்பை வழங்கி தான் ஓய்வுபெற்றுக் கொண்டார். ஓய்வுபெற்றுக்கொண்டாலும் இவ்வருடத்துக்கான விளையாட்டு விழாவுக்கு நான் சென்றிருந்த போது அவர் தானே தலைமைதாங்கி மிகச் சிறப்பாக அவ் விழாவை நடத்தியது எனது மனதில் பதிந்துள்ளது. அவரது தன்னலமற்ற சேவை பாராட்டுக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் நடத்தியது போன்று தொடர்ந்தும் இம் முன்பள்ளி சிறப்பாக நடைபெற உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள உறவுகள் தொடர்ந்தும் உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அமரர் நாகேஸ்வரி அவர்கள் தனது இறுதிக்காலங்களிலும் கூட இந்த முன்பள்ளிக்காகத் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றியுள்ளார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**செல்வி ஜெயா தம்பையா**
**பணிப்பாளர்,**
**ஆரம்பப்பிள்ளை அபிவிருத்திப் பிரிவு,**
**கல்வி அமைச்சு,**
**வடமாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Namagal Pre School Building Opening Ceremony - 24.08.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமகள் முன்பள்ளியின் நம்பிக்கை ஒளி

அமரர் திருமதி நாகேஸ்வரி அவர்கள் தென்மராட்சியில் புகழ்பூத்த மழலைகள் முன்பள்ளியாக நாமகள் முன்பள்ளியின் இயக்குநராக சுமார் நாற்பத்திரெண்டு ஆண்டுகள் சேவையாற்றியவர். ஒரு அன்னையாக, ஆசானாக, ஆன்மீகப் பற்றாளராக, சமூக சேவகியாக பல்பரிமாணங்களை வகுத்து வாழ்ந்தவர். இவரது சேவையின் பயனாக மாணவர்கள் உள்ளூரிலும், வெளியூரிலும் நற்பிரசையாக உருவாகி வசிக்கின்றனர். நாமகள் முன்பள்ளியின் ஸ்தாபகராக கணவராகிய ஆசிரியர் சங்கீதபூஷணம் அமரர் தர்மலிங்கம் அவர்கள் தமது வீட்டிலேயே ஆரம்பித்தார். அவரது இறப்பின் பின் முன்பள்ளியை அன்னை பொறுப்பேற்று சிறப்புடன் நடத்தியதுடன் தற்போது அவரது மகள் தர்மினி பொறுப்பேற்று, இப்பாடசாலையை நடத்துகின்றார். புதிய இடத்தில் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

முன்பள்ளிக் கல்விக்கு மேலாக ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்களையும் அறநெறி செயற்பாடுகளையும் மேற்கொண்டு வந்தவர். சமூகப்பணியிலும், ஆன்மீகப்பணியிலும் முன்பள்ளிச் சிறார்களின் கல்விப்பணியிலும் மெச்சத்தக்க முறையில் முறையில் செயற்பட்டு வந்த அன்னை எப்பொழுதும் விநாயகப் பெருமானையே அடிதொழுது வழிபட்டு வந்தார். அதன் பேறாய் அமரர் எட்டு தசாப்தங்கள் வையத்தில் வாழ்வாங்குடன் வாழ்ந்து ஆவணிச்சதுர்த்தி நன்நாளில் அரன் அடிபுகுந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டி அமைகின்றேன்.

**திரு. சு. கிருஸ்ணகுமார்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**தென்மராட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணில் நல்லாள்

அமரர் தர்மலிங்கம் நாகேஸ்வரி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். காணக்கிடைத்ததில்லை. காணக்கிடைத்த போது அவர் அமரராகிவிட்டிருந்தார். உண்மையில் அமரர் தர்மலிங்கம் நாகேஸ்வரி அவர்களைப் பற்றி அவர் வாழ்ந்த விதம் பற்றி பக்கச்சார்பற்ற ஒரு பதிவை முன்வைப்பதுதான் எனது நோக்கம். ஆகையினால் எனக்கும் அவருக்குமிடையிலான தொடர்பு என்பது நேரடியானது அல்ல அது சூட்சுமமானது என்பதை முதலில் சொல்லி வைக்கவிழைகிறேன்.

நாமகள் கல்வி நிலையத்தைப் பற்றி நான் முதன்முதலில் கேள்விப்பட்டது 1987ஆம் ஆண்டு என்று ஞாபகம். அந்த ஆண்டில் தான் நான் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலிருந்தும் விலகி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஒரு மாணவனாகச் சேர்ந்திருந்தேன். புதிய சூழல், பதின்மவயது நட்புகள் என்று எல்லாமே விசாரணைக்குரியதாக, ஒவ்வொரு சகபாடியையும் ஆதிமுதல் அந்தம் வரை அறிய வேண்டியிருந்தது. என்னுடைய வகுப்பில் அனேகமானோர் சங்கத்தானையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் எல்லோரும் தங்களைப் பற்றி விபரம் கூறுகையில் தவறாது உச்சரித்த நாமகள். தாங்கள் நாமகளில் படித்ததாக அவர்கள் கூறினார்கள். ஆனாலும் அது பத்தோடு பதினோராவது விபரமாகத்தான் அப்போது எனக்கு இருந்தது. நான் இன்றும் அமரர் தர்மலிங்கம் நாகேஸ்வரி அவர்களைப் பற்றி அறியாதவனாகவே இருந்தேன்.

அமரர் அவர்களைப் பற்றி நான் அறியக்கிடைத்தது கடந்த இருவருடங்களுக்கு முன்புதான். அவ்விதம் நான் அறியும் வகை செய்தவர் என் பக்திக்குரிய கணித ஆசிரியர் திரு. அருட்சோதிவர்ணன் அவர்கள் சங்கத்தானையிலுள்ள முன்பள்ளி ஒன்றிற்கு கட்டடம் ஒன்று அமைப்பதற்கான பழையமாணவர்களது பங்களிப்புக்கு மேலதிகமாக மாகாணசபையிடமிருந்து குறைநிரப்பு நிதியுதவி கோரி அவர் என்னிடம் வந்திருந்தார். கோரிக்கைக் கடிதத் தலைப்பைப் பார்த்தபோது நண்பர்களின் குரல்கள் காதுக்குள் மீளவந்து போயின. "நாங்கள் நாமகளில் படிச்சனாங்கள்".

ஆம், நாமகள் முன்பள்ளியின் கடிதத்தலைப்பு அது. வந்தவர் முன்பள்ளிச் செயற்பாடுகள் பற்றியும் அதன் ஆசிரியை பற்றியும் குறிப்பிட்டார். அப்போது தான் நான் ஒன்றை உணர்ந்தேன். எங்களுக்குள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை புளோரன்ஸ் நைட்டிங்கேல்கள், அன்னை திரேசாக்கள், அன்னி பெசன்ற்றுகள் இலைமறைகாயாக...! இங்கு இவர் குறிப்பிடுவது இன்னுமொரு மொண்டிசோறியையல்லவா என்று வாய் பிளந்தேன். அந்த வியப்பு நாமகள் முன்பள்ளியையும் நாகேஸ்வரி ரீச்சரையும் ஒன்று மற்றயதன் அடையாளமாக எனக்குக் காட்டியது.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நாற்பத்தைந்து வருடங்கள் என்பது பூரணமாக வாழக்கிடைத்த ஆயுட்காலத்தின் அரைவாசி. அதிலும் ஒரு குடும்பப் பெண்ணாக இருந்துகொண்டு இப்படியே கல்விப்பணி சனசமூக நிலைய சமூகப் பணி என்று தானே ஒரு முன்னுதாரணமாக ஒழுக்க விழுமியங்களையும் சமூகத்தில் விதைத்ததொரு பெண்ணில் நல்லாள் அமரர். நாகேஸ்வரி அவர்கள்.

1970ஆம் ஆண்டில் திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பித்து மூவாயி ரத்துக்கதிகமான மாணவர்களை சமூகத்தின் எல்லாப் பகுதிகளிலும் சாட்சிகளாய் பரவவிட்டு தற்போது முன்னுதாரணமான கல்விக்கூடமாக நிமிர்ந்து நிற்கும் நாமகள் முன்பள்ளியின் பிரகாசத்திற்கு காரணமாய் நாகேஸ்வரி என்ற கோபுரக் கலசம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!*

**சட்டத்தரணி கேசவன் சயந்தன்,**
**வடக்கு மாகாணசபை உறுப்பினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனங்களில் வாழ்வீர்

நிறைகுடம் தளம்பியதேன்
நிழற்குடை சாய்ந்ததேன் (சாய்ந்ததுமேன்)
பெரும் புயல் வீசியதேன்
பெரு விருட்சம் சரிந்ததேன் (சரிந்ததுமேன்)

அநாதையானேன் என்றுன்பிள்ளை
அலறித்துடிக்கையிலே
உற்றார் உறவுகள் ஊர்
ஒன்றாய்ப் புலம்பிட
எங்குற்றாய் எம் ஆசானே!

நிலையானது பிரிவுகள் (என்றும்)
நிலையற்றது எம் வாழ்வு
வாழுங்காலமதில்
சோகங்கள் கடந்து
துயரங்கள் சுமந்து
சவால்களைச் சந்தித்து
உம்பெயர் நிலைத்து நின்றாய்
பணி செய்தீர்!

நாமகள் முன்பள்ளி நடத்துநராய்
பெற்றவளைப் பிரிந்து
பேதலித்து வந்தவர்க்கு
உற்றவளாய் நின்று
உம்மடி இருத்தி
ஏடு தொடக்கி வைத்து
எழுத்தறிவித்தீர் ஆசானே!
அம்மனங்களில் வாழ்வீர்
என்றும் மாண்புடன் நீரே!

தாதிப்பணிக்கோர் நைற்றிங்கேல் போல்
முன்பிள்ளைப் பருவ விருத்திப் பணிக்கோர்
மொண்டசூரி அம்மையாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமளித்தீர் எம் இனிய ஆசானே
எம்மவர்க்கு என்றும் வழிகாட்டி நீரே!
செய்த சேவை தொடர்ந்திடவே
செம்மையாக மகளையும் - நீர்
நடந்த பாதைதனில்
தடம் பதிக்கச் செய்தீரே

கடமையைச் செய்து வாழ்வதனைப்
புகழுடன் முடித்தீர் பெருமாட்டி
பேறு பெற்றனை ஆசானே (வீடு)
பேறு பெற்றனை ஆசானே (உம் வீடு)

(வீடு பேறினை பெற்றனை ஆசானே)

**திருமதி ச. அரியநாயகம்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர்,**
**முன்பள்ளிப் பிரிவு,**
**தென்மராட்சி கல்வி வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை மனம் கொண்டவர் அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம்

சாவகச்சேரிப் பகுதியில் இயங்கும் முன்பள்ளிகளில் அனைவரினதும் மனத்தைக் கவர்ந்தது சங்கத்தானை நாமகள் பாலர் பாடசாலை என்பதை யாவரும் அறிவர்.

இப்பாலர் பாடசாலை ஆசிரியை திருமதி நாகேஸ்வரி அவர்கள் 46 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றியுள்ளார். 1970 ஆம் ஆண்டு இவரின் கணவர் அமரர் ஐயம்பிள்ளை தர்மலிங்கம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது இவர்களின் மகள் தர்மினி ஆசிரியை அவர்களின் வழிகாட்டலில் இயங்கி வருகிறது.

ஆசிரியை நாகேஸ்வரி அவர்களின் இல்லத்தில் இயங்கி வந்த பாடசாலை 2015 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இதுவரை இப்பாடசாலையில் 3000 க்கும் மேலான சிறார்களை இப்பாடசாலை வளர்த்துள்ளது. ஆசிரியை நாகேஸ்வரி அவர்கள் பாலர்களுக்கு கல்வியூட்டியமையால் அவரின் உள்ளமும் குழந்தை உள்ளம் கொண்டதாகத் திகழ்ந்தார். இப்பள்ளியில் பயின்ற அனேகர் இன்று வைத்தியர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும் ஆசிரியர்களாகவும் வர்த்தகர்களாகவும் திகழ்கின்றனர். சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள படியால் இதில் பயின்ற அனைத்து மாணவர்களும் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

நாமகள் பாலர் முன்பள்ளியில் பயின்ற பிள்ளைகள் நல்ல ஒழுக்கம் பண்பாடு, சமய விழுமியங்கள், கலை, கலாசாரம் கொண்டு திகழ்கின்றனர்.

ஆசிரியை நாகேஸ்வரி அவர்கள் நல்ல இறை பக்தியுடன் யாவருக்கும் அன்புடன் நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். பாடசாலை நன்கு வளர்வதற்கு பெற்றோர். எந்த நாளும் வேண்டிய உதவிகளைச் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் பிரதம விருந்தினராக என்னை அழைத்து சிறப்பித்துள்ளார். தனது அன்பு வார்த்தைகளினால் அனைவரையும் கவர்ந்து விடுவார்.

இவர் விட்டுச் சென்ற பாலர் பாடசாலையைத் தொடர்ந்து நல்ல நிலையில் முன்னெடுத்துச் செல்ல தற்போதைய ஆசிரியை தர்மினி அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதே நாம் செய்யக்கூடிய நல்ல உதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**வ. கயிலேஸ்வரன்**
**ஓய்வு நிலை அதிபர்,**
**சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்தவர்

சாவகச்சேரி நகரில் அழகுறு இடமாகக் காட்சியளிப்பது சங்கத்தானையாகும். இங்கு தமிழ் இந்து கலாசாரப் பண்பாடுகளுடன் பிறந்து வளர்ந்து அறிவாற்றலுடன் கூடிய ஆளுமை விருத்தியுடையவராகவும் நீண்டகாலம் முன்பள்ளி ஆசிரியராகத் திகழ்ந்தவர் திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் ஆசிரியராவார். இவர் சின்னஞ்சிறார்களுக்கெல்லாம் அன்னையாகவும், ஆசிரியராகவும் இருந்து அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளார்.

ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை அடி அத்திபாரமாக அமைவது முன்பள்ளிகளேயாகும். அதில் சங்கத்தானை நாமகள் முன்பள்ளி முன்மாதிரியாகவும் புதுப்பொலிவுடனும் திகழும் பள்ளியாகும்.

இவரிடம் கற்றவர்கள் பலர் அறிவாலும், ஆற்றலாலும் மேம்பாட்டு பல்வேறு தொழில்சார் துறைகளில் அங்கம் வகிக்கிறார்கள். இவரின் இழப்பானது நாமகள் முன்பள்ளிச் சமூகத்தினருக்கும் மற்றும் சங்கத்தானை கிராமத்திற்கும் பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி சியாமளா கந்தசாமி**
**அதிபர், யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



with Students - 05.01.2016

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியே வடிவான ஆசிரியை

அமரத்துவம் அடைந்துவிட்ட திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள் எனக்கும் என்மனைவிக்கும் அன்பு நிறைந்த அன்னையவர். அன்பும், சாந்தமும் கொண்ட ஓர் பெண்மணி. எமது தென்மராட்சிப் பிரதேசத்தின் மூத்த முன்பள்ளி ஆசிரியர். சங்கத்தானை தொடக்கம் மீசாலை வரையான பரந்த பிரதேசத்திலுள்ள மழலைகளுக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தறிவைத் தொடக்கி வைத்துப் புகழ்பெற்ற ஆசிரியை. தனது நாமகள் முன்பள்ளியில் கல்விகற்றவர்களின் பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்வியை வழங்கும் பேறுபெற்றவர். நீண்ட வரலாற்றைக் கொண்ட நாமகள் முன்பள்ளியுடன் ஒன்றறக் கலந்தவர். நாமகள் முன்பள்ளியின் வளர்ச்சியென்பது அமரத்துவமடைந்த நாகேஸ்வரி ஆசிரியையின் அர்ப்பணிப்பினாலும் உழைப்பினாலும் கட்டியெழுப்பப்பட்டது என்றால் அது மிகையன்று.

மழலைகளுக்குள் கல்வியூட்டுவது என்பது அவ்வளவு இலகுவான விடயமன்று. ஆனால் ஆசிரியை அவர்கள் எல்லாப் பிள்ளைகளையும் தன்பிள்ளைகளாகவும், பிற்காலத்தில் தனது பேரப்பிள்ளைகள் போலவும் அன்பு குழைத்து, அரவணைத்து, கல்வியையும் விளையாட்டையும் ஒன்று சேர்த்து வழங்கி, பாதுகாப்பும், பராமரிப்பும் வழங்கிய நேர்த்தியான ஓர் ஆசிரியை.

உண்மையில் அனுபவம் பெற்ற மூத்த முன்பள்ளி ஆசிரியை ஒருவரை நாம் இழந்து விட்டோம். அது இயற்கையை எண்ணி ஆறுதலடைவோம். அவருடன் இணைந்து அவரைப்போலவே முன்பள்ளி ஆசிரியராக மிளிரும் அவரது மகள் தர்மினி அவரது நல்ல பணியை முன்னெடுத்துச் செல்வார் என்ற நம்பிக்கை எமக்கெல்லோருக்கும் உண்டு.

ஆசிரியை அவர்களின் ஆத்மா சாந்தியடைய

இறைவனை வேண்டி நிற்கிறோம்.

**திரு. க. அருந்தவபாலன்**
**ஓய்வுநிலை அதிபர்,**
**யா/ சாவகச்சேரி , டிறிபேக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமகளைத் தந்த பூமகள்

அமரர் திருமதி தர்மலிங்கம் நாகேஸ்வரி அவர்களின் நினைவுகளை மீட்டு அசை போட வைத்து எழுத்தில் போடுவதற்கு விடயங்கள் பல உள்ள போதும் மன வேதனை, உள்ளத்தில் கவலை எழுத்தை மறைக்கும் கண்ணீர் இருப்பினும் சில விடயங்களைக் கூறியே ஆகவேண்டும். இது பலரின் சிந்தனையைத் தூண்டுவதுடன் தாங்களும் இவ்வாறு வாழவேண்டும் என எண்ணத் தூண்டும்.

இறந்தவர்களுடைய பெருமை ஏன் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது என்றால் அது வெறும் சம்பிரதாயத்துக்காக அல்ல. அதிலிருந்து மற்றவர்கள் நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

ஒருவர் தன்னுடைய வாழ்வை வாழ்ந்து முடிக்கும் போது அவருடைய வாழ்க்கை மூலம் மற்றவர்களுக்கு இடித்துக்கூறும் செய்திகள் பல இருக்கும். அச்செய்தியை வைத்து மற்றவர்களும் வாழவேண்டும். அதுவே பின்னர் நாம் பலருக்குக் கூறப்போகும் செய்தியாகவும் அமையும்.

அமரர் திருமதி தர்மலிங்கம் நாகேஸ்வரி அவர்கள் தன் வாழ்க்கை மூலம் எமக்கு இடித்துக்கூறும் செய்திகளாவது

1) மற்றவர்கட்கு முன் மாதிரியாகவும், சிறந்த பண்பாளராகவும் வாழ்ந்த வாழ்க்கை.

2) இறைபக்தி அதாவது எமது இத்தியடி விநாயகர் மீது நம்பிக்கை வைத்து ஆலய திருப்பணியிலும், வளர்ச்சியிலும் பங்கேற்றமை.

3) எமது பகுதி மக்கட்கு ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து நாமகள் பாலர் பாடசாலையை நிறுவியமை.

4) இலகுவில் தமிழ் அறிவு, சமய அறிவு புகட்டும் தன்மை.

5) மற்றவர்களைப் புண்படுத்தாத பண்பு

6) மனிதநேயம், நேர்மை, பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு.

7) வீண் சண்டைக்குப் போகாமை.

8) ஒற்றுமை, விருந்தோம்பல் பண்பு.

9) அமைதியானதும், அளவானதுமான பேச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) தான் மட்டும் வாழாமல் சமூகம் நன்கு வாழ வேண்டும் என்ற உயரிய பண்பு.

இவற்றை நல்ல வழிகாட்டல்களாக ஏற்றுக் கொண்டு நாமும் எமது வாழ்க்கையில் மற்றவர்களுக்காக நல்ல செய்திகளைச் சேகரித்து வைப்போமாக. இவையே நாமில்லாக் காலத்தில் மற்றவர்களால் பேசப்படும் எழுதப்படும்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள்:....)

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். அமரரின் இறப்பு ஆவணிச் சதுர்த்தி தினத்தன்று நேர்ந்தது. அவரின் இறைபக்தி வீண் போகவில்லை என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

"பிறப்பவர் எல்லாம் இறப்பது திண்ணம்" என்பதை தெரிந்திருந்தும் அறிந்திருந்தும் உங்கள் இழப்பினை எவராலும் ஈடுசெய்ய முடியாது.

**திரு. த. பரமானந்தம்**
**ஆசிரியர் (பிரான்ஸ்)**
**பழைய மாணவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளுடன் ஓர் இதய அஞ்சலி

ஆலமரமொன்று அடியற்றுப் போய்விட்டாலும் அதன் மண்ணகத்து வாழ்வுக்கு சாட்சிகளாய் நிற்பதுபோல் - வேராய் விழுதுகளாய் ஈழத்து மண்ணெங்கும் - இன்னும் புலம்பெயர் தேசமெங்கும் பாசத்துடன் எங்கள் நல்லாசிரியையின் நற்பணிக்குச் சாட்சிகளாய் நிற்பதனால் அம்மா நீ மண்ணகத்து மாந்தரிலே மாசற்ற தெய்வந்தான்.

தாரமும் குருவும் விதிப்படியே வருவதென்பார். அந்த விதியின் வழியால் கல்விக்கடலின் கரைமினைத் தேடிச்சென்று- கற்றோர் அவையகத்து கனதியுடன் முன்னிருக்க வைத்ததனால் மண்ணகத்தில் எம்மைத் தலைநிமிர வைத்தவளே! உன்தாள் பணிந்து உன் அடியைப் போற்றுகின்றோம். அம்மா உன் விழுதுகள் நாம் வையகத்தில் உனது தன்னலம் கருதாத சேவைக்கும், பெற்றவள்போல் காட்டி நிற்கும் பேரன்பிற்கும் தலைசாய்த்து வணங்குகின்றோம். விதியின் வழிதேடி உன்பயணம் விரைந்திட்டாலும் மண்ணகத்தில் உன் நாமம் என்றும் நிலைத்திருக்கும். அம்மா நீ சென்று மீண்டும் பிறந்திடுவாய். உனது வருகைக்காக ஈர விழிகளுடன் இம்மண்ணில் நாங்கள் இனிதே காத்திருக்கின்றோம். விரைந்து நீ வரவேண்டும். விதி அதுவாய் நிற்க வேண்டுதல்கள் செய்து விடை தந்தே விரைந்து நீ வந்திடுவாய்.

**வைத்திய கலாநிதி**
**த. சதீஸ்குமார் (பழைய மாணவன்)**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Most Service and Best Teacher Award on 2015 Teacher's day

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவித்த இறைவி

சங்கத்தானையில் கடந்த 46 ஆண்டுகளுக்கு முன்னர் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாமகள் பாலர் பாடசாலை ஆனது தென்மராட்சி மண்ணின் மிக நீண்ட பாரம்பரியத்தையும், அதிக பழைய மாணவர்களையும் கொண்ட பெருவிருட்சம்.

அமரர் திரு. தர்மலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்களால் இற்றைவரை நிர்வகிக்கப்பட்டு வந்தது.

அன்னாரின் திடீர் மறைவானது எம்மை ஆழ்ந்த கவலையடையச் செய்துள்ளது.

தான் வாழும் காலத்தில் நாமகள் பாலர் பாடசாலைக்கெனத் தனியான கட்டடம் ஒன்று அமைக்கவேண்டுமெனத் தனது தள்ளாத வயதிலும் உறுதியோடு முன்வந்து அதனைச் செவ்வனே இத்தியடியான் இறையருட்கடாட்சமாகச் செய்து முடித்து, 2011 இல் அவரது கனவு நனவானது.

சங்கத்தானைப் பதியிலே நாமகள் பாலர் பாடசாலையில் கற்காத சிறார்களே இல்லை எனலாம். இத் நல்லாசானிடம் கற்ற மாணவர் பலர் இன்று வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள் எனப் பல நிலைகளில் உயர்ந்துள்ளனர்.

தாயின் அரவணைப்பில் இருந்து வரும் பிள்ளைகளுக்குத் தானும் ஓர் தாயாகி அன்பு, கருணை, இறைபக்தி, நல்லொழுக்கம் ஆகியவற்றைக் கற்பித்த பெருந்தகை.

ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுப் போட்டி நடைபெறும் பொழுதும், பிள்ளைகள் தரம் ஒன்று அனுமதிக்குச் செல்லும் போதும் பிள்ளைகளுக்குத் திருநீறு, திலகம் இட்டுப் பாடசாலைக்கு அனுப்பு அவருடைய சைவசமய பக்குவம் நெஞ்சை நெகிழ வைத்து அன்புருகச் செய்யும்.

அன்னார் தான் வாழ்ந்த காலத்தில் (முன்பள்ளிகளின்) முன்னோடியான முன்பள்ளியாக உருவாக்கினார். இன்று தன்வழியில் தனது மகளைத் தன் பணிகளை, அம் முன்பள்ளிக் கருமங்களை ஆற்றும் பொறுப்பினை உவந்தளித்து இறைபதம் எய்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் இத்தியடியான்பால் கொண்ட கருணையும் அன்பும் மிகவும் போற்றத்தக்கது. அவர் எண்ணியது போல் தன் விருப்பத்துக்குரிய இத்தியடியான் பிறந்த தினமான சதுர்த்தியிலே இறைபதம் எய்தியமை என்பது எல்லோருக்கும் வாய்க்காத பேறு.

அன்னார் இறந்தும் இறவாமல் எம்முடன் எம் பிள்ளைகளின் கல்விக்கூடத்தின் கற்றல் செயற்பாடுகளோடும் வாழ்ந்தே வருகின்றார். யாருக்கும் தான் வாழும் காலத்தில் தீவினை நினைக்காது இறைவழிபாடும், பக்தி உலகும் என்று வாழ்ந்த இப் பெருமாட்டியின் சேவை மறக்கற்பாலது.

நான்கு தலைமுறைகளில் வாழ்ந்தவர்களுக்குக் கல்வி புகட்டிய பெருமையும், பணியும் என்பது சாதனையே. எங்கள் காலத்தில் பழைய (பழம்) ரீச்சர் என்று அன்பாக அழைப்போம். இன்றைய தலைமுறையின் இளஞ்சிட்டுக்கள் 'அம்மம்மா ரீச்சர்' என்று அன்பாக அழைப்பர். தலைமுறைகள் தாண்டி யுகம் யுகமாய் எம் எல்லோர் மனதிலும் நீங்கள் காலம் உள்ளவரை இந்த ஞாலத்தில் வாழ்வீர்கள்.

இத்தியடியான் கழல்களில் இளைப்பாற வேண்டி அமைகின்றேன்.

**உங்கள் மாணவன்**


**நா. இராஜன்**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Lastyear Birthday Celebration at home





Birthday Celebration with Students & Teachers - 22.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்களுக்கு எனது அன்புக் காணிக்கை

i) திருவடியே சரணமெனத் தினமும் வந்து
மருவு மலர்ப்பாதம் தொழுது நின்று
செகமீதில் அருள் சுரக்கும் இத்தியடியானை
அகமதில் வைத்து அருள் சுரந்தாயே.

ii) நாகேஸ்வரியாக நவமதனில் அவதரித்தாய்
நாமகள் பாடசாலையின் அதிபரானாய்
பேசு தமிழைக் கற்பித்தாய் சிறார்களுக்கு
பாசுரக்கும் பங்கயமாயிரமானாய் பண்பிலே.

iii) கேட்டதெல்லாம் ஈந்தருளும் இத்தியடியானை
பாட்டுப்பாடி பண்ணிசை பஜனை செய்தாய்
மண்ணுலகில் பிறந்தோர் மரிப்பது நியதி
மாண்டவர் மீண்டும் வருவதில்லை இப்பூவுலகில்.

iv) சிந்தையெல்லாம் நீயே என்று விநாயகனை வணங்கி
வந்தென்னை ஆண்டு அருள் என நினைந்து
விந்தையுலகிலே வேதனைகளை அனுபவித்து
பந்தபாசங்களை விட்டு சங்கமம் ஆனாயோ. ஆவணிச்சதுர்த்தியில்.

**ஆலய பூசகரும், தலைவரும்,**
**பரிபாலன சபையும்,**
**இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் உறைவிடம் எங்கள் அம்மம்மா ரீச்சர்

சங்கத்தானை, நாமகள் பாலர் பாடசாலையின் ஸ்தாபகர் அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்பதை நம்ப மறுக்கின்றது என் உள்ளம். நேற்றுவரை புன்னகை மாறாத முகத்தோடு பிஞ்சு மழலைகளின் உள்ளக்கதவை மெல்லத் திறந்து பக்குவமாய்ப் பாசத்தோடு கல்வி புகட்டிய தாய் எங்கள் நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள். நாமகள் பாலர் பாடசாலையைத் தனது வீட்டிலே ஆரம்பித்துப் படிப்படியாகப் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியான கற்றல் சூழலை உருவாக்கி அல்லும், பகலும் அயராது சின்னஞ்சிறு மழலைகளுக்குக் கல்வியூட்டுவதே தன் கடன் என்று, தளராது துணிவோடு செயற்பட்டவர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கினை உள்ளத்தே இருத்தி ஓயாது இயங்கிய எங்கள் ஆசிரியை அவர்களின் இடைவிடாத முயற்சியின் பயனாக நாமகள் பாலர் பாடசாலை புதுப்பொலிவோடு நிமிர்ந்து நிற்கிறது. ஆசிரியை அவர்கள் மறைந்தாலும் உலகம் உள்ளவரை அர்ப்பணிப்பான அவரது பணி எம் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.

ஒவ்வொரு பிள்ளையும் கல்வியிலே உயர்நிலை பெறுவதற்கு முன்பள்ளிக் கல்வியே அடிப்படையாக அமைகிறது. அந்த வகையிலே எமது பிரதேசத்தில் எத்தனையோ ஆயிரம் பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறந்து அரும்பணியாற்றியவர் அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள். அவரது சுறுசுறுப்பான செயற்பாடுகளும் அன்பான வார்த்தைகளும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களாலும் அவரிடம் கல்வி கற்றவர்களாலும் எளிதில் மறந்து விடக்கூடியன அல்ல. முன்பள்ளிக் கல்விக்காய் நாமகள் பாலர் பாடசாலைக்கு வரும் குழந்தைகளைத் தாயைப்போல அரவணைக்கும் தனித்துவமான தயாள குணத்தை எல்லோரிடமும் காணமுடியாது.

கல்விப் பணியைக் கடவுள் பணியாகக் கருதி எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு மூலகாரணமாய் விளங்கிய அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள் நாமகள் பாலர் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததால் தனது மகளையும் முன்பள்ளிக் கல்வி ஆசிரியராய்ப் பயிற்சி பெற வைத்துத் தனது சேவையைத் தொடர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியுள்ளார். தன்னுடைய சேவையால் தரணியிலே என்றும் நிலைத்திருப்பார் அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம்.

"மானிடர் ஆன்மா மரணமெய்தாது

மறுபடி பிறந்து இறக்கும்"

என்று கீதையிலே கிருஷ்ணபகவான் அருளிய போதனையை எண்ணி எம் உள்ளத்தைத் தேற்றுவோம். அமரர் அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவருடைய பிரிவால் துயரமடைந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

**ந. அருட்ஜோதிவர்ணன்**
**ஓய்வுநிலை ஆசிரியர்.**
**யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பமுடியவில்லை தங்கள் மறைவு

*04.09.2016* அன்று தங்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. இந்தச் செய்தி பொய்யாக இருக்காதோ என்று வேதனைப்பட்டேன். அது உண்மையாகிவிட்டதே. இறைவன் என்னதான் நினைத்தானோ? இவ்வுலகில் நீங்கள் செய்தசேவை போதும் என்று நினைத்தானோ? அல்லது நோய்வாய்ப்பட்டுத் துன்பமடைய வேண்டாம் என்று நினைத்தானோ? இவ்வளவு விரைவாக இறையடி சேர்வீர்கள் என்று நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

மழலைகளை அன்பினால் அரவணைத்து ஆரம்பக் கல்வியை ஊட்டி அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். மழலைச் செல்வங்களால் "அம்மம்மா ரீச்சர்" என அன்புடன் அழைக்கப்பட்டார். நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் குழந்தைகளோடு எப்போதும் வாழ்ந்து குழந்தை மனம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

நாமகள் பாலர் பாடசாலைக்கு ஒரு நிரந்தரக்கட்டடம் தேவை என்பதை உணர்ந்து வீடுவீடாகச் சென்று நிதி உதவி பெற்று அதனை நிறைவேற்றினார்.

நாமகள் பாலர் பாடசாலைக் கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்குப் பிள்ளையார் எப்போதும் துணை நிற்பார் என அடிக்கடி கூறுவார். அவர் கூற்றுப்படியே பிள்ளையாரின் துணையுடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுப் புதிய கட்டடத்தில் பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கின்றது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்பதற்கமைய இறைவனிடம் சங்கமித்துவிட்டார். தனது கணவரால் ஸ்தாபிக்கப்பட்ட நாமகள் பாலர் பாடசாலையையும் மழலைச் செல்வங்களையும் நேசித்தவர். அவர் இறைபதம் எய்திய தினம் சதுர்த்தி ஆகும். இது அவரது உண்மையான தெய்வபக்தியை எமக்கு எடுத்துரைக்கின்றது.

அவரது பிரிவால் துயருறும் மகள் தர்மினி மற்றும் உற்றார் உறவினர்களுக்கு என ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கந்தையா வேலாயுதபிள்ளை**
**முன்னாள் கிராம உத்தியோகத்தர்,**
**சங்கத்தானை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Namagal Pre School Sports meet - 20.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அருமை நண்பி எங்கு சென்றீர்?

சாவகச்சேரி சங்கத்தானையில் நேசறிரீச்சர் என்றால் தெரியாதவர் இருக்கமுடியாது. திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் எனும் நாமத்தைக் கொண்ட முன்பள்ளி ஆசிரியையே அந்த நேசறிரீச்சர். அவருக்குப் பெரிய ரீச்சர், பழம் ரீச்சர் என வேறு பெயர்களும் உண்டு. எத்தனை பெயர்களால் அழைத்தாலும் அத்தனைக்கும் பொருத்தமானவராக வாழ்ந்து வந்துள்ளார்.

திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் எனது உற்ற நண்பி. நாம் இருவரும் இத்தியடி விநாயகப் பெருமானின் தரிசனத்தின்போது ஒருவரை ஒருவர் சந்தித்தோம். அதன்பின் தொடர்ந்து அவரை எனக்குப் பார்க்க வேண்டும் போல இருக்கும். அவவிற்கும் என்னைப் பார்க்க வேண்டும் போல இருக்கும். மரியாதை கலந்த அன்பினால் ஒருவரைப் பார்க்க வேண்டும் போல இருந்தால் அவரே நாம் மதிக்கின்ற மனிதரும் எமக்குப் பிடித்தவரும் ஆவார். அப்படி ஆரம்பித்ததுதான் எமது நட்பு. பலரிடம் வாழ்க்கையின் அந்தரங்கங்களைச் சொல்லமுடியாதது போல சிலரிடம் அவற்றைச் சொல்லாமல் இருக்கவும் முடியாது. அப்படி நாம் இருவரும் ஒருவருக்கொருவர் அந்தரங்கங்களை மனம்விட்டுப் பேசிக்கொள்வோம். அன்பாகப் பழகிவந்தோம். இது நட்பின் வரலாறு.

திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கமும் அவரது கணவரும் சுயநல நோக்கமின்றிப் பொதுநலநோக்கோடு பிறருக்குச் சேவை செய்ய வேண்டுமென எண்ணி நாமகள் பாலர் பாடசாலையை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் தமது சொந்தவீட்டில் நான்கு பிள்ளைகளிற்குக் கல்வியைப் புகட்டி வந்தனர். நாளடைவில் வளர்ச்சிகண்டு வரும் வேளையில் திரு. தர்மலிங்கம் அவர்களைக் காலன் கவர்ந்து கொண்டான். கணவனை இழந்தபோதும் திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் தன்னம்பிக்கை இழக்காமல் தான் எடுத்துக்கொண்ட பணியை உறுதியுடன் செய்து வந்தார். ஒன்பது பிள்ளைகளுடன் பாலர் பாடசாலை எனப் பெயரிட்டுப் பணி தொடர்ந்தது. இன்று 60 பிள்ளைகள் வரை கல்வி பயிலும் முன்பள்ளியாக வளர்ச்சி கண்டு மிளிர்கின்றது. நாமகள் முன்பள்ளியின் ஸ்தாபகர், நிர்வாகி, ஆசிரியர் எனப் பலமுகங்களில் முன்பள்ளியை நிர்வகித்து வந்துள்ளார் திருமதி தர்மலிங்கம்.

முன்பள்ளி ஆசிரியருக்குப் பொருத்தமான தோற்றம், நல்லொழுக்கம், இறைபக்தி, பொறுமை, அமைதி, அன்பான வார்த்தை, அழகான சிரிப்பு, சமூக இசைவாக்கம் கொண்டவராகத் திகழ்ந்தார். அன்னையின் அரவணைப்பில் இருந்து வெளியே வரவிரும்பாது வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகர்களிற்குத் தாயாக மாறி அவர்களுக்கு ஏற்றவாறு தம்மை இசைவாக்கம் செய்து அந்தப் பச்சிளம் பாலகர்களை மகிழ்வாக வைத்திருக்க வேண்டும். பாலர் பாடசாலை ஆசிரியைகள் பொறுமையின் சிகரமாகவும் சகிப்புத்தன்மையுடையவராகவும் இருக்கவேண்டும். அழுகின்ற பிள்ளையை சிரிக்க வைக்க வேண்டும். தூங்குகின்ற பிள்ளையைத் துயில் எழுப்ப வேண்டும். துள்ளுகின்ற பிள்ளையைத் துடுக்கடக்கி பள்ளியில் நல்ல பாலகனாகப் பயிற்றுவித்து ஆரம்பக் கல்விக்கு அத்திவாரமிடவேண்டும். இவற்றையெல்லாம் திறம்படச் செய்து இந்து ஆரம்ப பாடசாலைக்குரிய நற்பயிர்களாக அனுப்பி வைத்து வந்துள்ளார் திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்.

இத்தியடி சங்கத்தானையில் பெரும்பாலும் அவரிட்ட அத்திவாரத்தில் முளைத்த பயிர்களே இப்பொழுது வளர்ந்து வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், ஆசிரியர், இலிகிதர் இன்னும் பல பணிகளில் விருட்சங்களாக வளர்ச்சி பெற்றுத் திகழ்கின்றனர். இவர்களின் ஆரம்பக் கட்டுமானப் பணியாளர் என்ற பெருமை திருமதி ந. தர்மலிங்கத்தையே சாரும்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்

என்கடன் பணி செய்து கிடப்பதே''

எனும் தேவாரப் பாடல் வரிகளிற்கு ஏற்ப திருமதி தர்மலிங்கம் இத்தியடி விநாயகரை வழிபட்டு தன்னால் இயன்ற பணிகளையும் தொண்டுகளையும் செய்து வந்துள்ளார். ஆலய உட்சுற்றுப் பிரகாரத்தில் கீதையின் நாயகன் கிருஷ்ணனிற்கு ஓர் கோயில் அமைத்து வழிபட்டு வந்துள்ளார். ஒவ்வொருவருடைய பிறப்பிற்கும் ஒவ்வொரு காரணமும் கடமையும் உண்டு. திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கத்திற்கும் சில கடமைகள் காத்திருந்தன. முதலில் கோவிந்தருக்குக் கோவில் அமைத்தார்.

தான் ஆரம்பித்த முன்பள்ளிக்கு நிரந்தரமான கட்டடம் வேண்டும். அதற்குக் காணி வேண்டும் என்பது அவருடைய ஆதங்கம் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று முயற்சித்தமையால் இந்தக் கிராமத்தில் வாழ்ந்த கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள், பரோபகாரிகள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் பங்களிப்பால் நாமகள் முன்பள்ளி சொந்தக் காணியில் நிலையான கட்டடத்தில் இன்று நிமிர்ந்து நிற்கின்றது. தனது விருப்பம் நிறைவு அடைந்த திருப்தியில் தனது கடமை முடிவு எய்தியது என எண்ணி காலனிடத்து அணுகிவிட்டார் போலும். தனது மகள் முன்பள்ளிப் பொறுப்பை ஏற்று நடத்தும் பக்குவம் பெற்றுள்ளார். அவர் அதனைத் திறம்பட நிர்வகிப்பார் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தோம், மடிந்தோம் என்றில்லாமல் "வாழ்வது ஒருமுறை, வாழட்டும் தலைமுறை" என்ற சந்தோசத்துடன்,

**நோயிற் றிடராமல் நொந்து மனம் வாடாமற்**
**பாயிற் கிடவாமல் பாவியேன் காயத்தை**
**ஒரு நொடிக்குள்**
**நீக்கியெனை ஒண்பேரூரா! ஐயா! உன்றன்**
**சீரடிக் கீழ்வைப்பாய் தெரிந்து.**

எனத் தன் வாழ்வை முடித்துக் கொண்டார்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய அவர்விட்டுச் சென்ற பணி சிறக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். முன்பள்ளியில் இன்னும் பலதேவைகள் நிறைவு செய்யப்பட உள்ளன. அவற்றை நிறைவு செய்வதே ஆசிரியையின் ஆத்ம சாந்திக்கு நாம் செய்யும் உதவி ஆகும்.

நிலையற்ற உலகம், நிரந்தரமற்ற வாழ்க்கை. இடை இடையில் மறைந்து போகின்ற உறவுகள் . சில உறவுகளைப் பிரிய முடிவதில்லை. ஜீரணித்தே ஆக வேண்டும். என்ன செய்வது, ஆசிரியையின் மகள் நான் தனித்து விட்டேன் என்று கவலைப்படுகின்றார். ஒவ்வொருவருக்கும் உண்மையான துணை இறைவன் ஒருவனேதான். அவர் துணை நிற்பார். ஆசிரியையின் குடும்பத்தாருக்கும் மகளிற்கும் நல்ல உளஉறுதியை வழங்கவேண்டும். அவர் வழிநின்று அவர் தொடக்கிவைத்த பணியை திறம்படச் செயற்படுத்தினால் அன்னாரின் ஆத்மா சாந்தியடையும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**திருமதி பத்மாதேவி தியாகராசா**
**ஓய்வுநிலை ஆசிரியை,**
**யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**
**இத்தியடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Adorable vava mamy....

A lanient lady with hear full of love, she`s not here to be with as now. From the day of my birth till the day of here death she was with me as my vava mamy.......

She was honest and fair A hardcare devotes of pillayar she was perfect in her woras and deeds. As a beloved teacher at namagal our guardian angel and a role model.

She was really a precious treasure learning from her was a matter of pleasure. A gloominess spread as she departs but never and over from our hearts. Love and gratitude we have for her will travel to heaven along with her.

**N. Luxika Cold Student**
**Demo, English Liturature,**
**Jaffna University.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Namagal Sports meet at J/ Chavakachcheri Hindu College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பண்புள்ள ஆசான்

ஆதவன் தனக்காக உதிப்பதில்லை. ஆறு தனக்காக ஓடுவதில்லை. மரம் தனக்காக பழம் தருவதில்லை. மழை தனக்காக பொழிவதில்லை. பொழுது தனக்காக விடிவதில்லை. பொன் தனக்காக துலங்குவதில்லை. நன்றிகள் தனக்காக தெரிவிப்பதில்லை. நல்லோர் தமக்காக வாழ்வதில்லை. இந்தவகைப் பலருள் ஒருவர் அம்மம்மா ரீச்சர் (திருமதி தர்மலிங்கம் நாகேஸ்வரி) என்றால் அது மிகையாகாது.

எம்முடன் பாசமும் நேசமும் வைத்து பரிவுகாட்டி அன்புடன் குசலம் விசாரிக்கும் அன்பு ஆசானின் பிரிவு மன வேதனையைத் தருகின்றது. அழகிய சிரிப்பு, பணிவான வார்த்தைகள், பொறுமை உள்ளம் கொண்ட ஆசானே! உமது இழப்பு எம்மால் இழக்கப்பட்ட பேரிழப்பு. இறை பக்தி கொண்டவர். முன்பள்ளி நிகழ்ச்சிகள் எதுவாக இருப்பினும் முதலில் தேங்காய் கொண்டு ஓடுவார் பிள்ளையாரிடம் இப்போது எம்மை விட்டு பிள்ளையாரிடமே போய் சேர்ந்து விட்டார். இனி யார்? பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்துவது என்று சொல்லித்தருவார்? இந்த ஆசானுக்கு இணையாக இருப்பது. பிள்ளைகளுக்கு இனிப்புப்பண்டம் கொடுப்பது ஆசானின் வழக்கம். நாங்களும் பிள்ளைகளோடு பிள்ளை-களாக அமர்ந்திருக்கையில் ஓர் அழகான புன்சிரிப்புடன் எமக்கும் இனிப்புத் தருவீரே இனியார் தருவது? பிள்ளைகள் உமது இழப்பால் தவிக்கின்றார்கள். நாங்கள் எதைச் சொல்வது என்று தெரியாது நிற்கின்றோம்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவைப்பாட்டி. 46 வருடம் தனது சேவைகளால் நல்ல நிலைக்கு உயர்த்தியவர். எம்மை விட்டு வெகுதூரம் செல்லவில்லை. அருகிலே இருப்பது எமக்கு புலனாகின்றது. ஆசானின் மறைவு பெரும் இழப்பு மட்டுமல்ல, உலகிற்கு பெரும் இழப்பு (அவரின் குடும்பத்தினர்க்கும்) அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறையை வேண்டுகின்றோம்.

எதிர்காலம் உருவாக

- செயலை விதையுங்கள், பழக்கம் உருவாகும்.
- பழக்கத்தை விதையுங்கள், குணம் உண்டாகும்.
- குணத்தை விதையுங்கள் உங்கள் எதிர்காலம் உருவாகும்.

-போர்டுமென்-

**நாமகள் பாலர் பாடசாலை**
**ஆசிரியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைசிறந்த ஆசான்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் : 50)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய திருமதி நாகேஸ்வரி ஒரு தலை சிறந்த முன்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தவர்.

அமரர் நாகேஸ்வரி அவர்கள் நாமகள் முன்பள்ளியை 1970களில் சிறிய அளவில் தனது வீட்டில் அவரது கணவரின் முயற்சியால் ஆரம்பித்து சிறப்பாக நடாத்திவந்தார். " எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பதற்கமைய தென்மராட்சி வலயத்தில் புகழ்பூத்த முன்பள்ளிகளில் ஒன்றாக கடந்த 46 வருடங்களாக இம் முன்பள்ளியை நடாத்தி வந்தார். இவர்களிடம் கல்வி கற்றவர்கள் தற்போது உயர்பதவிகளிலும், சிறந்த தொழில் முயற்சியாளர்களாகவும் விளங்க இவரின் ஆரம்ப அடி அத்திவாரமே காரணமாயமைந்தது.

தாதிப்பணிக்கோர் நைற்றிங்கேல் போல் முன்பிள்ளைப் பருவ விருத்திப் பணிக்கு மொண்டசூரி அம்மையாராய் பரிமளித்தார். தான் செய்த சேவையைத் தொடர மகளையும் தாம் நடந்த பாதைகளில் தடம் பதிக்கச் செய்தவர்.

ஆசிரியை நாகேஸ்வரி அவர்கள் நல்ல இறைபக்தியுடன் யாவருக்கும் அன்புடன் நல்வழிகாட்டியாகவும் வாழ்ந்தவர். கடமையைச் செய்து வாழ்க்கையைப் புகழுடன் முடித்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவ. ராஜ்குமார்**
**முகாமைத்துவப் பணிப்பாளர்,**
**கரிகணன் (தனியார்) நிறுவனம்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் திருவூஞ்சல்

சீருரு மீழவுள நாட்டின் மேவுந்
　　தீங்கனி மாப்பலவு குலைக் கதலிக்காயும்
நீருரு மணிமருதச் செந்நெல் கன்னல்
　　நிலவு நறும் பூகமெங்கு நீடுசெல்வத்
தேருரு மூர் சாவகச் சேரி சார்
　　இத்தியடி விநாயகர்க்கோ ரூஞ்சல் செப்பக்
காருரு மொருமூன்று மதங்கள் சிந்துங்
　　கயமுகவன் கமலபதங் காப்பதாமே. -01

திருவமரு மறை நான்குந் தூண்களாக
　　செய்ய சிவாகமங்கள் சட்டமாக
குருவமரு மாறங்கங் கயிறதாக
　　குலவுமுப நிடதத மதிற் பலகையாக
விருவமரு முயர் சாவகச்சேரி சார்
　　இத்தியடி யிலங்கு திருக்கோயின் மேவும்
வெருவமரும் விறலசுர பகைவர்ச் செற்ற
　　வீரகத்திச் சேதகரே யாடீ ரூஞ்சல். -02

அலகிலொரு மேருவரைத் தூணை நாட்டி
　　அசைவகலுஞ் சேடனெனுங் கயிறை பூட்டி
உலகமெனும் பலகை அதிற் பொருந்த மாட்டி
　　உவப்பினுடன் நலமாக அமையும் நல்ல
இலகவரு மிச்சாவகச்சேரி சாரித்தியடி
　　மேவுதிருக் கோயிற் கண்ணாய்
விலகிலருங் கண்ணருளி மன்னி வைகும்
　　வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -03

இந்திரனு மிமைவரும் பற்றி யாட்ட
　　ஈசனுமை அவளுளங்கள் கசிந்து காட்ட
சந்திரனுஞ் சூரியனுங் கவிதை தாங்க
　　தம்புரு நாரதன் செயுநல்லிசைக ளோங்க
இந்துவளர் தருஞ் சாவகச்சேரி சா
　　ரித்தியடி மேவுதிருக் கோவில் வைகி
விந்தைபெறு மடியவர் விக்கினங்கள் தீர்க்கும்
　　வீரகத்தி சேதகரே ஆடீ ரூஞ்சல். -04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியொரு புத்தியிரு பாலுஞ் சேர
சீமகளுந் நாமகளுங் களிகள் கூர
சித்தியொரு வல்லமைதன் மடியின் மேவு
சாரதையு மரம்பையரும் மலர்கள் தூவ
எத்திய னைவருஞ் சாவகச்சேரிச்சா
ரித்தியடி மருவுதிருக் கோவின் மன்னி
பித்தையிலா திருபோக முதவுந் துய்ய
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -05

பீடுபெறும் வேதமுதற் பொருளேயான
பிரணவத்தி னுருவமெண வெவர்க்குங் காட்டும்
பீடுபெறு மதங்கமுக மிலங்கித் தோன்றும்
இருமருப்பினொரு மருப்பன் றொடித்து விட்டே
கோடு பெறுங் கயமுகனை சமரினேற்று
குறையமரர் தீரமுனங் கொன்று வேண்டும்
வீடுபெறு மாறருளி மன்னி வைகும்
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -06

பாங்குவரு மிருவரையும் பரிந்து நோக்கி
பாணியின் மாங்கனியவர்க்குத் தருவா னேந்தி
ஊங்குலகு முழுமுதல் சுற்று னர்க்கே
உதவுவதென் றுரைத்திடலு மவனைச் சுற்றி
பாங்குகனி தனைவாங்கி தளர்ந்து வந்த
தம்பிதனக் குலதந்தை யென்று காட்டி
வீங்குடிலைப் பொருளாய் விளங்கி வைகும்
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -07

பம்பிவளர் தினைப்புனத்தில் புட்க ளோம்பி
பரணமருங் குறமகளை கூட்ட வுன்னி
தம்பிகள வியற் பொருட்டாய்த் தளராவண்ணம்
தனித முகில் போன் முளங்கித் தையலஞ்ச
தும்பியுரு வானவனே தொன்னாட் செய்து
தொடர்ந்து வரும் வல்வினை நோய் தம்பினொந்து
வெம்பிவரு வோர்க்கருளி வைகுஞ் செய்ய
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பியனார் திருநாடே ஆகு சோளஞ்
செளிப்புறு செஞ்சாளி வளந்தேங்க முன்னம்
தம்பிநிலை யெனுந் தவத்தாற் பெரியோனாக
நருங்குறிய முனிகரகங் கொண்ட கங்கை
பம்பி நிலம் பாய்தருவான் காக்கை யாகி
படர்ந்து கவிழ்த் தேர்பெறு காவிரி யென்றுய்த்தே
வெம்பிய பேருயிர்க் குதவும் துய்ய
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -09

ஆட்டமுள அரனுமையோ பாடுஞ் சூதில்
வடாதுவரும் பொய்ச்சான்று பகரும் மாயன்
வாட்டமுள யுமையிடுஞ் வெஞ் சாபத்தாலே
வருமெரிவா யரவமென மயங்கிப் பூசை
நீட்டமுறச் செயவிரங்கி நேர்ந்தா காமல்
நிகழ்வினையாற் பாம்புருவம் நீக்கி யின்னும்
கேட்டவர மவர்க்கருளிக் காக்குந் துய்ய
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -10

ஈடுதரு மங்குசரே யாடீ ரூஞ்சல்
இலங்கிய வம்பிகை மகரே யாடீரூஞ்சல்
பீடுதரு மிறைமகரே யாடீரூஞ்சல்
பிறை கொளொரு மருப்பினரே யாடீரூஞ்சல்
காடுதரு கயமுகரே யாடீ ரூஞ்சல்
கங்கை யருண் மாமகரே யாடீரூஞ்சல்
வீடுதரு மித்தியடி விரும்பி வைகும்
வீரகத்திச் சேதகரே ஆடீ ரூஞ்சல். -11

மாதமொரு மூன்றுமழை பெய்து வாழி!
மாதவமும் வேள்விகளும் தழைத்து வாழி!
நீதிமுறை யாகிய செங்கோலும் வாழி!
நிலமகளும் மன்னுயிரும் நெடிது வாழி!
ஏதமில் சாவகச்சேரி தானும் வாழி!
இத்தியடி மேவு திருக்கோவில் வாழி!
வேத நெறியோடு மறையவரும் வாழி!
வீரகத்திச் சேதகரும் வாழி! வாழி! -12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை

பணிபவர்கள் பவமகற்றும் பகவா எச்சரிக்கை
முன்னமுள மேவுகய முகவா எச்சரிக்கை
துன்ன மறுவில் வரங்கடருவாய் எச்சரிக்கை
வன்ன மலரிட்டவர் முன்வருவாய் எச்சரிக்கை

ஆற்று வினையிரும் புரியுமரமே எச்சரிக்கை
ஆனமறை சொற்ற பொருட்சிரமே எச்சரிக்கை
அடுக்கி வருதத்துவத்தின் பரமே எச்சரிக்கை
அம்மை முதலீன்றருள் குஞ்சரமே எச்சரிக்கை

ஒடித்தமரி லோச்சு மொருமருப்பா எச்சரிக்கை
பிடித்த சுவைப் பாகுணவில் விருப்பா எச்சரிக்கை
முடித்த வினையாருள மிருப்பாய் எச்சரிக்கை
தடித்தவுல கோம்பு மருட்பொருட்பா எச்சரிக்கை

அம்பிகை யோடைம் முகர்க்கோர் வரனே எச்சரிக்கை
ஆனைமுகத் தோடுறு மைங்கரனே எச்சரிக்கை
அரியயனை யாதியவர் தம்பரனே எச்சரிக்கை
அசுரபகை செற்று வருமரனே எச்சரிக்கை

பக்தியுடன் மாங்கனி கொள்மகனே எச்சரிக்கை
போற்றுமவர் தமக்குதவு மகனே எச்சரிக்கை
போகமுத்தி வேட்டருள் செய்மகனே எச்சரிக்கை
இத்தியடி வைகு விநாயகனே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கு

வேழமுக மேவு துதிக்கையா பராக்கு
வேண்டியெனை யாள வருமையா பராக்கு
வெட்ட வெளியாயுலவு மெய்யா பராக்கு
வேதன நியேத்தி வரும் துய்யா பராக்கு

மூவகைய தாயவுயர் தேவகா பராக்கு
முடிவு முதலாகிவரு மேகா பராக்கு
மூவரையு முந்துவது வாகா பராக்கு
முத்தொழிலு மாற்று மொருவேதா பராக்கு

புவமொழிய வீடெமக்குத் தாராய் பராக்கு
பாரிலுறு வல்வினைகள் தீராய் பராக்கு
பாங்கு பெற வாருமிசை வாராய் பராக்கு
பாவையர் களோட மருஞ் சீரா பராக்கு

பதமுதவி வருங்கமல பாதா பராக்கு
விளைவு தரு மந்தரங்க வேதா பராக்கு
தந்தமனு வாதியவர்கள் தாதா பராக்கு
நந்தமூல கோம்பி வருநாதா பராக்கு

மத்திய வைகுண்ட முதல் விண்ணா பராக்கு
புத்திபெற ஓது மறைப் பண்ணா பராக்கு
சத்தியயி லேந்து கரற் கண்ணா பராக்கு
இத்தியடி மேவிய முக்கண்ணா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

| | |
|---|---|
| வேழமுக நாதருக்கு | மங்களம் |
| விரிந்த மலர்ப் பாதருக்கு | மங்களம் |
| மேன்மை பெறும் வேதருக்கு | மங்களம் |
| வீசு மிரு காதருக்கு | மங்களம் |
| | |
| அமலை தருமையருக்கு | மங்களம் |
| ஐந்து திருக்கையருக்கு | மங்களம் |
| மூன்று வகை மெய்யருக்கு | மங்களம் |
| தோன்று மருட் துய்யருக்கு | மங்களம் |
| | |
| நீடுமன்பர் நேசருக்கு | மங்களம் |
| ஈடுபெறும் ஈசருக்கு | மங்களம் |
| மாறுமன்பர் வாசருக்கு | மங்களம் |
| சேணவீர் மெய்த் தேசருக்கு | மங்களம் |
| | |
| ஆகுவெனும் வாகனர்க்கு | மங்களம் |
| குலகு பதக் கோகனர்க்கு | மங்களம் |
| திகளு மடிச் சேகனர்க்கு | மங்களம் |
| போற்று மனு போகருக்கு | மங்களம் |
| | |
| கத்து பறை காரணர்க்கு | மங்களம் |
| பொத்து மருட் பூரணர்க்கு | மங்களம் |
| அத்து வித வாரணர்க்கு | மங்களம் |
| இத்தி யடி வாரணர்க்கு | மங்களம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொன்னூஞ்சல்

*சீர் ஆர் பவளம்கால் முத்தம் கயிறு ஆக்*
*ஏர் ஆரும் பொன்பலகை ஏறி இனிது அமர்ந்து*
*நாராயணன் அறியா நாள்மலர்த்தாள் நாய் அடியேற்கு*
*ஊர் ஆகத் தந்து அருளும் உத்தர கோசமங்கை*
*ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடி*
*போரார் வேல் கண்மடவீர்! பொன் ஊசல் ஆடாமோ!* (1)

*மூன்று அங்கு இலங்கு நயனத்தன் மூவாத*
*வான்தங்கு தேவர்களும் காணா மலர் அடிகள்*
*தேன்தங்கித் தித்தித் அமுதுஊறித்தான்தெளிந்து அங்கு*
*ஊன்தங்கி நின்று உருக்கும் உத்தர கோசமங்கைக்*
*கோன்தங்கு இடைமருது பாடி குலமஞ்ஞை*
*போன்று அங்கு அனநடையீர்! பொன்ஊசல் ஆடாமோ!* (2)

*முன் ஈறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்*
*பல் நூறு கோடி இமையோர்கள் தாம் நிற்ப*
*தன்நீறு எனக்கு அருளித் தன்கருணை வெள்ளத்து*
*மன் ஊற மன்னும் மணி உத்தர கோசமங்கை*
*மின் ஏறும் மாடம் வியல்மா ளிகைபாடிப்*
*பொன் ஏறு பூண்முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ!* (3)

*நஞ்சு அமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்*
*மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை*
*அம் சொலாள் தன்னோடும் கூடி அடியவர்கள்*
*நெஞ்சுளே நின்று அமுதம் ஊறிக் கருணைசெய்து*
*துஞ்சல் பிறப்பு அறுப்பான் தூய புகழ்பாடி*
*புஞ்சம் ஆர் வெள்வளையீர் பொன் ஊசல் ஆடாமோ!* (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணோ அலியோ அரிவையோ என்று இருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்ய ஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊண் ஆக உண்டு அருளும் உத்தர கோசமங்கைக்
கோண் ஆர் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூண் ஆர் வனமுலையீர்! பொன்னூசல் ஆடாமோ! (5)

மாது ஆடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாது ஆடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோது ஆட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல்பிறவித்
தீது ஓடா வண்ணம் திகழப் பிறப்பு அறுப்பான்
காது ஆடு குண்டலங்கள் பாடிக் கசிந்து அன்பால்
போது ஆடு பூண்முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! (6)

உன்னற்கு அரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்து இறைஞ்சப் பாவங்கள் பற்றுஅறுப்பான்
அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணி மயில்போல்
என் அத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடி
பொன் ஒத்த பூண்முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! (7)

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுது உண்டு தாழ்கடலின் மீது எழுந்து
ஞாலம் மிகப்பரிமேல் கொண்டு நமை ஆண்டான்
சீலம் திகழும் திருஉத்தர கோசமங்கை
மாலுக்கு அரியானை வாயார நாம்பாடிப்
பூலித்து அகங்குழைந்து பொன் ஊசல் ஆடாமோ. (8)

தெங்குஉலவு சோலைத் திருவுத்தர கோசமங்கைத்
தங்குஉலவு சோதித் தனிஉருவம் வந்து அருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எந்தரமும் ஆட்கொள்வான்
பங்குஉலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குஉலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குஉலவு பூண்முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ! (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

01. முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

02. பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

03. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற் (கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.

04. காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறுவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

06. உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

07. சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக் (கு)
ஆடக மாலை அன்னகோவுக் (கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்துநாமே.

08. வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

10. முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

11. மாடு நகைவாள் நிலா வெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக் (கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

12. மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென் மொழியீர்
என்னுடைய ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

14. சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய் இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

15. ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

16. ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

18. அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

19. வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

20. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்(கு)
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



**திருச்சிற்றம்பலம்**

**முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு**
**என்னின்று அருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்**
**சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்**
**எக்குற்றமும் வாராமற் கா.**

**வேண்டுதற் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தேவாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளித் தாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளைஅற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதித் தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருள்வாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
இச்சகத்தி லுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்து கௌரியே காப்பருளும்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹ்ன கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுஸராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூசித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராபரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

நேரிசை வெண்பா



## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பிற்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தன் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை



### காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல் பலவும் மேன் மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீஎன்றுங் காப்பு.

### விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் - எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

**சப்பாணி**

எள்ளு பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

**சரஸ்வதி துதி**

புத்தகத்துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்.

தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயலிசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ திருவருள் செய்திடு வாயே.

**அதிகாரம்**

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிதபத்திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

மந்தர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள் புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவன் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மகவு ஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பைந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பு இறப்பு இல்லாப் பெரியோர்க்கு அன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னை உன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மாணிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக்கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம் இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்து ஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கஎன
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்து எனை அழைக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முன்னியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான்சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லை என்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக்காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீலகண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொரு அங்கு அவன்அடி வீழ்ந்து இறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந்த ருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரண பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்.
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக்கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உட னிருத்திப்
பறைஒலி யோடு பணிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சை அம்பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கல்வியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனு
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்கரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவ ராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத்தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர்படைசூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன் பார்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவம் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம்வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல்விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றனர்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர்எனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒரு கையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
துவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்துஎமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங்கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைத்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராசு மனம்வரை கொடுத்து
ஐந்து அமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப்பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈர்ந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுடன டைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடு அர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும்அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகற்று அறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடி வேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்கு உடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகவன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம்அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளிப்பீர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் சொல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர்கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமரவேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்செய்ய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறைவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தோடு கவுரி அங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமகனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தன்னால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஒரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூந்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சங்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விரும்புடன் நோற்றபின்
மாதுமை அடைத்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண்டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம் இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புண;ரந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன் இவ் விரதம்நோற் போனெனை
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவளுக்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரணமாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனை புகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்த்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர்மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணம் எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மன்னிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவென புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்து பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிரத த்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்லம்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங்கள் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரியிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் வந்தவுடனே நம் மனதைக் குளிர வைக்க வரும் விரதம் வைகுண்ட ஏகாதசி விரதம் ஆகும். கங்கையின் தீர்த்த மகிமையைப் போலும், காயத்ரி மந்திரத்தின் அதிர்வுகளின் ஆழமகிமையைப் போலும், கோயிலின் ஆகமத்தைவிட தாயின் அன்பு அரவணைப்பு விஞ்சியிருப்பதைப்போலும், திருமாலின் உன்னத கருணையைப்போல் விரதங்களில் சிறந்ததாக விளங்குவது வைகுண்ட ஏகாதசி.

நமது வாழ்நாளில் ஒரு வருடம் தேவ வருஷத்தில் ஒரு நாள் ஆகிறது. அதில் தை முதல் ஆனி முடிய உள்ள ஆறு மாதம் பகல் என்றும் ஆடி முதல் மார்கழி முடிவுள்ள ஆறு மாதம் ஒரு இரவு என்றும் உள்ளத்தில் இப்பகுதி இரவுக் காலத்தில் அதிக இருட்டும், மழையும், பனியும், குளிரும் பகல் பொழுது குறைந்தும் காணப்படுகின்றது. இத்தருணத்தில் மார்கழி மாதத்தின் தேவ இருட்டுப் பொழுதில் அதாவது உஷக் காலம் எனும் அதிகாலை நான்கு மணி முதல் ஆறு மணி (பிரம்ம முகூர்த்தம்) உள்ள கால அளவில் வைகுண்ட வாசல் திறக்கப்படுகின்றது. அவ்வேளையில் ஆலயங்களில் திருப்பள்ளியெழுச்சியும், திருப்பாவையும் படித்து பரந்தாமனுக்கு பொங்கல் பிரசாதங்களை நிவேதனம் செய்கின்றோம்.
வைகுண்ட ஏகாதசி அன்று பரந்தாமன் வைகுந்தத்தில் இருந்து சொர்க்கவாசல் வழியாக நமக்காக வந்து கருணை மழை பொழிகின்றார்.

**சொர்க்க வாசல்:**

மார்கழி மாதம் தேவர்களின் உஷக்காலம் எனப்படும் அதிகாலை நேரமாக இருப்பதால் வைகுந்த வாசல்கள் திறந்தே இருப்பினும் பகவான் அதன் வழியாக வெளியே வந்து காட்சி தரும் நாள் வைகுண்ட ஏகாதசி .

**ஏகாதசியின் சிறப்பு:**

ஒரு வருடத்தில் 25 ஏகாதசி விரத நாட்கள் வருகின்றன. வளர்பிறை ஏகாதசி என்றும், தேய்பிறை ஏகாதசி என்றும் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு ஏகாதசிகள் உண்டு நாழிகை வேறுபாட்டினால் கூடுதலாக ஒரு ஏகாதசி நாள் வரும். ஆக இருபத்தைந்து ஏகாதசியும் விரதம் கடைபிடித்தால் வாழ்வின் உயர்ந்த அந்தஸ்துகள் நம்மைத் தேடிவரும். அனைத்து ஏகாதசியும் விரதம் கடைப் பிடிக்க முடியாவிட்டாலும் உதய காலத்தில் வைகுண்ட வாசல் திறக்கும் மார்கழியில் வரும் வைகுந்த ஏகாதசி அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் உண்ணாவிரதம் இருந்து இரவு கண்விழித்து விரதம் கடைபிடித்தால் மற்ற 24 ஏகாதசி விரத சிறப்புப்பலனும் சேர்ந்து கிடைக்கும்.

**விரதம் பிறந்த விதம்:**

தால ஜங்காசுரனுடனும் (முரன்) அவன் புதல்வன் மருவாசுரனுடனும் பரந்தாமன் போரிட்டு களைத்து ஒரு குகையில் அயர்ந்து இருக்கையில் (தூங்கிக்கொண்டிருக்கையில்) விஷ்ணுவின் ஆற்றல் ஒரு தேவப் பெண்ணாக உருவெடுத்து அசுரர்களைத் தனது ஓங்காரத்தால் பஸ்பமாக்கியது. விஷ்ணு விழித்து விபரம் உணர்ந்து அத்தேவதைக்கு ஏகாதசி எனப் பெயரிட்டு உன்னை விரதம் இருந்து போற்றுவோருக்கு நான் சகல நன்மைகளையும் தருவேன் என வரமளித்து தன்னுள் மீண்டும் சக்தியை ஏற்றுக்கொண்டார். எனவே ஏகாதசி எனும் சக்தி விழிப்புடன் இருந்து பரந்தாமனின் அருளும் வரமும் பெற்ற இந்நாளில் நாமும் கண்விழித்து விரதம் கடைப் பிடித்தால் என்றும் நீங்காப் புகழுடன் பொருள் பெற்று சிறப்பாக வாழ்வோம். பரந்தாமனின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும். வாழ்வில் ஏற்றம் நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் நிலைத்திருக்க சில விதிமுறைகள்

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண் டேயிருப்பதை விடுங்கள்
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள், விடுக்கொடுங்கள்
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள், குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்திக் கர்வப்படாதீர்கள்
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர்கள் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவ-றாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சில் பண்பில்லாத வார்த்தைகளையும், நடத்தையில் தேவையில் லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதல் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சைத் தொடங்க முன் வாருங்கள்.

**தொகுப்பு**

**திரு. த. பரமாநந்தன்**

**ஆசிரியர் (பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா ரீச்சரின் உள்ளத்திலிருந்தும் அனுபவத்திலிருந்தும் பாலர்களுக்காய், குழந்தை உளவியல் பற்றி பெற்றோரிற்கு

குழந்தை உளவியல் தொடர்பாகப் பல கோட்பாடுகள் உருவாக்கப் பட்டுள்ளன. இது பரந்த விடயங்களை கொண்டிருந்த போதும் ஒரு சில விடயங்களே நோக்கப்படுகிறது. குழந்தையின் பூரண விருத்தியில் ஆளுமை முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆளுமை தொடர்பாகப் பல்வேறு உளவியலாளர்களும் காலத்திற்குக் காலம் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். ஆளுமையில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனினும் சமூக மனவெழுச்சிக்காரணிகளே பெரும் பங்கினை வகிக்கின்றன. சமூக மயமாக்கலுக்கும், சமநிலை ஆளுமையை உருவாக்குவதற்கும் ஒருவனது சமூகவளர்ச்சியும் மனவெழுச்சி வளர்ச்சியும் சமாந்தரமாக நிகழுதல் வேண்டும் 6 வயதுக்கு முன்னர் குழந்தையினுடைய உளவியல் தேவைகள் திருப்தி செய்யப்படாத சந்தர்ப்பத்தில் பாதகமான மனவெழுச்சிச் செயற்பாடுகள் தோன்றும். உதாரணமாக, அழுகை, கோபம், பயம் என்பன.

பிள்ளைகள் தம் உளவியல் தேவைகளை தம் தாயிடமே எதிர்பார்ப்பார். அன்பும், ஆதரவும், பாராட்டும் கிடைக்கும் பிள்ளைகளது செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமானதாகவும், எதிர்கால வாழ்க்கைக்கு ஆழமான அத்திவாரமாகவும் அமையும். எனவே பாரபட்சமின்றிப் பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியர்களும் நல்ல உறவுப்பாலத்தை குழந்தைகளிடையே கட்டியெழுப்புவார்களாயின் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

**குழந்தையின் உடலபிவிருத்தி பற்றி**

விளையாடுவது சிறுபிள்ளைகளுக்கு சந்தோசத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. விளையாட்டு இல்லாமல் அபிவிருத்தி இல்லை. விளையாட்டில்லாத செயற்பாடு பிள்ளையை மழுங்கடிக்கச் செய்யும் விளையாட்டு என்பது பிள்ளைகள் தங்களுடைய உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு உபயோகிக்கும் பிரதான கருவியாக மட்டுமன்றி கஷ்டமான வாழ்க்கை அனுபவங்களை இணைத்துக் கொள்வதற்குரிய கருவியாகும். பிள்ளைகள் விளையாட்டின் மூலமே வளரத் தொடங்குகின்றனர். விளையாட்டினூடாக பிள்ளைகள் கற்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் எந்த நேரமும் விளையாட்டு என அலுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் விளையாட்டினூடாக கற்கும் போது மகிழ்ச்சிகரமாக கற்கின்றார்கள் என்பதை மறந்து விடுகின்றார்கள். விளையாட்டினூடாக பிள்ளைகள் நல்ல அனுபவங்களையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள முடிகின்றது. புதிய புதிய வித்தியாசத்தை அனுபவரீதியாக விளையாடும் போது பெற்றுக் கொள்வர். முதியோர் தலையீடும் இருக்காது. பிள்ளைகள் விளையாடுவதற்கு வளர்ந்தோர்கள் உதவ வேண்டும். விளையாட்டு சம்பந்தமான பொது விதிகளையும் அறிந்திருப்பது அவசியமாகும்.

பிள்ளையின் பூரணமான விருத்திக்கு உடலபிவிருத்தி அறிவாற்றல் விருத்தி, ஆக்கத்திறன் விருத்தி, சமூக மனவெழுச்சி விருத்தி என்பவை இடம்பெற வேண்டும். இதில் உடலபிவிருத்தியே அடிப்படையானது. உடல் ஆரோக்கியமாக இருந்தாலே ஏனைய விருத்திகள் ஏற்படும் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் ஆரம்ப பிள்ளைப்பருவக் காலம் அவர்கள் வாழ்க்கையில் மிக முக்கியமானது. இக்காலத்தில் பிள்ளைகள் உடல் ரீதியாக விரைவாக வளர்வார்கள். இக்காலகட்டத்தில் பிள்ளைகளிடத்தில் கவனமெடுக்க வேண்டியது பெற்றோரதும் முன்பள்ளி ஆசிரியர்களினதும் பொறுப்பாகும். பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. போசாக்கான நிறையுணவு, உடற்பயிற்சி, சுத்தம், சுகாதாரம், சதந்திரமான விளையாட்டுகள், ஓய்வு என்பனவாகும் பிள்ளைகளின் வீட்டுச்சூழல் மிகவும் அவசியமானது. வீட்டுச்சூழல் மகிழ்ச்சிகரமாக இருந்தால் பிள்ளையும் மகிழ்ச்சிகரமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். வீட்டுச் சூழல் மகிழ்ச்சிகரமற்று இருப்பின் அது பிள்ளையின் உள்ளத்தை தாக்கும். சந்தோசமாக பிள்ளை எந்தச் செயலிலும் ஈடுபடாது இதனால் உடலபிவிருத்தி குன்றும் பெற்றோர்கள் இது தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும்.

**கற்றலின் முக்கியத்துவம் பற்றி**

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” இளமையிலேயே கற்றல் நிகழ்வுகளும், கற்கும் ஆற்றலும் அதைப் பற்றிக் கொள்ளும் அளவும் நிகழ்கின்றது. எனப் பல கல்விமான்கள் கூறியுள்ளனர். பிள்ளையின் தனித்துவம் மலர வேண்டும். இது பிள்ளையின் வளர்ச்சியில் மிக முக்கியமானதாகும். பிள்ளையின் விருப்பத்திற்கேற்ப பிள்ளை மையக் கல்வியாக இருக்க வேண்டும். எதையும் திணிக்கக் கூடாது. திணிப்பது பிள்ளையின் தனித்துவத்தையும் ஆற்றலையும் குழப்பிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைப் பிள்ளையால் செய்யமுடியாது என்பதை விட எதைப்பிள்ளை செய்யும் என்பதே ஆரம்பப் பிள்ளைப் பருவத்தின் அடிப்படையாகும். பிள்ளையின் முதல் 5 வருடங்கள் மிகவும் முக்கிய வளர்ச்சிக் கட்டமாகும். இந்த வயதிற்கு முன் ஏற்படும் கற்றல் அனுபவங்கள் வளரும் பிள்ளைக்கு மிக முக்கிய பங்கினை அளிக்கின்றது. இளமையிலேயே பல்வேறு நடத்தைக் கூறுகளும் ஆளுமையும் உருவாவதாக ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர். சிறுவயதில் ஒரு நிகழ்வின் மூலம் கிடைக்கும் அனுபவம் வாழ்க்கை முழுவதும் நிலைத்திருக்கும். ஆகையால், பெற்றோர்களும் ஆசிரியர்களும் இளமைக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.

**சிறுவர் உரிமைகள் பற்றி**

பிள்ளைப்பருவமானது மானிட வாழ்வின் மிக முக்கியமான காலகட்டமாகும். எனவே ஒரு பிள்ளை அப்பருவத்திலே தான் அனுபவிக்க உரித்துடைய அனைத்து உரிமைகளையும் உரியவாறு அனுபவிப்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கின்றது. மேலும் பிள்ளைப் பருவத்திற்குரிய உடல், உள முதிர்ச்சி இன்மை காரணமாக ஒரு பிள்ளையின் பிறப்புக்கு முன்பும் பின்பும் வளர்ந்தோர் பிள்ளையின் மீது விசேட கண்காணிப்பு செலுத்த வேண்டும் என்பது ஏற்கப்பட்ட ஒரு நியதியாகும். இந்த நியதி ஏற்றுக் கொள்ளப்படுவதன் காரணமாக வளர்ந்தோரால் பிள்ளைகளின் மீது நிறைவேற்றப்படக்கூடிய பொறுப்புக்கள் பல உண்டு.

ஒரு பிள்ளையானது தான் அனுபவிக்க உரித்துடைய சகல உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு. சிறுவர்களின் உரிமைகளை அவ்விடத்தில் இருந்து பறித்துக் கொள்வோர் அவ் உரிமைகளைப் பாதுகாப்பதில் பொறுப்பாளியான வளர்ந்தோரேயாவர். சிறுவர்களின் உரிமைகள் வீட்டில், பாடசாலையில், வேலைத்தளத்தில் மற்றும் பல்வேறு இடங்களில் மறுக்கப்படுகின்றன. வீட்டிலிருந்து ஆரம்பிக்கப்படக்கூடிய "பாரபட்சம் காட்டாமை" வலுப் பெறக்கூடிய இடமாக முன்பள்ளி அமையும். சகல பிள்ளைகளும் இன, மத, மொழி, சாதி, பொருளாதார வேறுபாடின்றி சமத்துவமாக நடாத்தப்படல் அத்தியாவசியமானது.

பிள்ளைகளின் உரிமையில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மிக முக்கிய பொறுப்பு வாய்ந்தவர்களாக உள்ளனர். இவர்கள் பிள்ளைகளை உடல், உள, ரீதியாக வளர்த்து ஆளாக்குபவர்கள், கணக்காணிப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவார். பெற்றோருக்குச் சமமான பல உரிமைகள் ஆசிரியர் வசம் இருப்பதென்பதை சட்டம் ஏற்றுக் கொள்கின்றது. பிள்ளைகளது எதிர்காலத்தை நெறிப்படுத்துவதில் தீர்மானத்தை மேற்கொள்ளும் போது ஆசிரியர் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள், பெற்றோரது பொறுப்புக்களையும் தாண்டிச் செல்லும் பலம் பொருந்தியதாகும். எனவே ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒவ்வொருவரும் சிறுவர் உரிமைகள், அது தொடர்பான சட்டங்களை அறிவதுடன் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அவர்களது கடமையாகும்.

**தொகுப்பு**
**நாமகள்**
**(பொறுப்பாசிரியை)**
**த. தர்மினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந் நன்றி கொன்ற மகற்கு"**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து வழிகாட்டி, எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் **திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்** அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறு-தல்கூறி துன்ப துயரங்களில் பங்குகொண்டோருக்கும், தொலைபேசி மூலமும், பத்திரிகை மூலமும் அஞ்சலி செலுத்தியோருக்கும், மலர்-வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இன்றைய தினம் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையை நடத்தி வைத்துள்ள அந்தண சிவாச்சாரியார்களுக்கும், எமது அழைப்பை ஏற்று இன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் மற்றும் இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org